அரசினுடைய பரிசீலனைக்கு விரைவில் அனுப்ப இருக்கிறார்கள். அது வந்தபிறகுதான் முடிவு தெரியும்.

திரு. பி. என். வல்லரசு: தலைவர் அவர்களே, அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள அரசு முன் வருமா அல்லது அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ள முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர் களே, இந்த ஆண்டு முடியாது அரசின் ஆய்வு அறிக்கை வர வேண்டும். பிறகு அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும் . நிதிநிலைக் கேற்ப அவை பின்னால் மேற்கொள்ளப்படலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியிலே தண்ணீர் கொண்டு போவதிலே —விருவேட்டிலிருந்து என்றிருக்கிறது விருவேடு என் தொகுதி. இந்தத் தண்ணீர் வைகை பெரியார் அணைக்கட்டி லிருந்து வரும்போது, இரண்டு பக்கங்களிலுள்ள நிலங்களை யெல்லாம் சேர்த்து இணைத்து 6 ஆயிரம் ஏக்கரா? இல்லை தனியாக உசிலம்பட்டிக்கு மட்டும் 6 ஆயிரம் ஏக்கரா? என்பதைத் தயவுசெய்து அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அம்மை யார் அவர்கள் முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கை ப்டிக்கிறபோது இங்கே இருந்தார்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்று கேட்டால் அதிலேமுதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்கள். பெரியார் வைகை மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் நவீனப்படுத்துவதற்கு இரண்டு கட்டமாக செய்து கொண்டிருக்கிறார்கள் உலக வங்கி உதவியுடன், இரண்டாவது கட்டப் பணி, 31.4.1991-க்கு முடிய வேண்டும். ஆனால் இந்த இரண்டாவது கட்டப்பணியிலே கொஞ்சம் பணம் நமக்கு மிச்சம் இருக்கிறது. சுமார் 16.85 கோடி ரூபாய். அதை பாசனப் பகுதிக்கே பயன்படுத்த வேண்டும் என்பதற்காக, பயன்படுத்த வேண்டுமென்று அரசு நினைத்து வைகை அணையிலிருந்து நேராக ஒரு கால்வாயை பேரணை ரெகுலேட்டருக்கு வெட்டுவதற்கு முடி வெடுத்திருக்கிறோம். அந்தக் கால்வாய் வெட்டப்படுமானால் பெரியகுளத்திற்கும், நிலக்கோட்டை தொகுதிக்கும் கிட்டத்தட்ட 4 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறப்படுகிறது. பெரியார் பிரதான கால்வாயிலிருந்து மணல்படிவத்தைத் தடுப்பதற்கு இது உதவுகிறது. ஆக இவ்வளவும் உங்களுடைய தொகுதியிலேதான் அதிகமானப் பகுதி பயன் பெறப்போகிறது என்கிற விவரத்தை அம்மையார் அவர்கள் அறிவார்கள். எங்கே அதை எப்படிச் செய்ய வேண்டுமென்ற கடிதக் குறிப்பும் என்னிடத்திலே இருக்கிறது.

பம்பிங் ஸ்டேஷனுக்கு நேரடி மின் இணைப்பு

* **2116**—திரு. பொ. முருகேசன்: மாண்புமிகு பொதுப்பணித் **துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:**

1990 மார்ச் 19]

காஞ்சிபுரம் நகராட்சிக்கு மின்சாரம் சரியான முறையில் கிடைக்காததால் குடிதண்ணீர் தட்டுப்பாடு எற்படுவதைத் தவிர்க்க சிங்கபெருமாள் கோயிலிலிருந்து நேரடியாக காஞ்சிபுரம் நகராட்சிக்கு பாலாற்று குடிநீர் வழங்கும் பம்பிங் ஸ்டேஷனுக்கு இணைப்புத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, சிங்கப் பெருமாள் கோவில் சப்-ஸ்டேஷனிலிருந்து, உறுப்பினர் கேட்ட வண்ணம், பாலாறு பம்பிங் ஸ்டேஷனுக்கு நேரடியாக மின் இணைப்புத் தரமுடியாது, ஏனென்றால் சிங்கப்பெருமாள் கோவில் சப்-ஸ்டேஷன் 230/111 கிலோவாட் திறன் கொண்ட சப்-ஸ்டேஷன் ஆகும். பாலாறு பம்பிங் ஸ்டேஷனுக்குத் தேவை யானது 11 கிலோவாட் மின்சாரம்தான். எனவே, இந்த 11 கிலோவாட் மின்சாரத்தை, காஞ்சிபுரத்திலுள்ள 110/11 கிலோ வாட் சப்-ஸ்டேனிலிருந்து வழங்குவதுதான் சரியானதாக இருக்கும், அதன்படிதான் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

(9-40 மணி)

திரு. பொ. முருகேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக காஞ்சிபுரம் நீர்த்தேக்கம், குடிநீர்ப் பிரச்சினையிலே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிற நீர்த்தேக்க மாகும். எனவேதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இப்போது அறிவித்திருக்கிற பட்ஜெட்டிலே காஞ்சி மாநகராட்சியின் மீது கருணை வைத்து, அங்கு குடிநீர் திட் டத்தை விரிவுபடுத்துவதற்காக, காஞ்சி மாநகரை இந்தப் பட் டியலில் சேர்த்து இருக்கிறார்கள். அதற்காக காஞ்சித் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். எனக்கு இருக்கின்ற குறைபாடுகள் எல்லாம் இருக்கின்ற சிறிதளவு குடிநீரை வினியோகிப்பதில் இந்த மின் தடை தடங்கலாக இருக்கிறது. எனவே காஞ்சிபுரத்தில் இருக்கின்ற மின் இணைப்பில் அடிக்கடி தடங்கல் எற்படுகிற காரணத்தால் தான் தனியாக மின் இணைப்புத் தரவேண்டும் என்பதற்காக சிங்கப்பெருமாள் கோவிலுக்கு தனியாக லைன் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் இருக்கின்ற குடிநீர் திட்டத்தை ஒழுங்காகச் செயல்படுத்துவதற்கு மீண்டும் அரசு பரிசீலனை செய்து அந்த இணைப்பைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அதைச் செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்ட காலக்கட்டம் 1989 ஜனவரி முதல் ஏப்ரல் 1989 வரை, இப்போது நிலைமை மாறுபட்டு இருக்கிறது, தடங்கல் இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகேசன் அவர்கள் மீண்டும் கேள்வி கேட்கத் தேவை இருக்காது என்று கருதுகிறேன்.